07.04.2026

O.S.No.190/2022

PW1- மாரி – த/பெ. வேலாயுதம்

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 07.04.2026.

<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி :</u> ( 1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில்)

18. என் வீட்டின் வடக்கு பக்கம் உள்ள காலி இடத்தில் பிரதிவாதிகள் செல்லாதவாறு நான் ஏதேனும் அடைப்பு வைத்துள்ளேன் என்றால் இல்லை பிரதிவாதிகள் தான் முள்வேலி வைத்து அடைத்துள்ளார்கள்.

19. வழக்கு தாக்கல் செய்யும் முன்பு நில அளவையர் வைத்து அளவீடு செய்யப்பட்டது என்றால் சரிதான். அவ்வாறு அளக்கும் போது பிரதிவாதிகளின் இடம் கிழக்கு பக்கம் வருவதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல அளவுகள் சரியாக உள்ளது. நான் வழக்கிற்காக தவறாகக் கூறுகின்றேன் என்றும் என் பிராதிலும், நிரூபண வாக்குமூலத்திலும் இடம் இருப்பதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

20. கிழக்கில் இருந்து அளவீடு செய்தால் தான் என் வீட்டின் அளவை சரியாக அளவீடு செய்யமுடியும் என்றால் சரியல்ல மேற்கில் இருந்து அளந்தால் தான் அளவு சரியாக இருக்கும்.

21. பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட கிழமேலாக உள்ள பாதையில் நடந்து வந்து தென்வடலாக பிரதிவாதிகளின் இடத்திற்கு சென்று வருகிறார்கள் என்றால் சரியல்ல அது பொதுப்பாதை.

22. முடுக்கில் நான் வீடு கட்டக்கூடாது என்று பிரதிவாதிகள் வழக்கு தாக்கல் செய்தார் என்றால் சரிதான்.

23. வழக்கிற்கு பின் முடுக்கில் சிமெண்ட் வைத்து வீடு கட்டியுள்ளேன் என்றால் சரிதான் அது எனக்கு பாத்தியப்பட்ட இடம்.

24. பிரதிவாதிகள் சுவற்றை பராமரிப்பதற்காக விட்ட காலி இடத்தை தான் என் இடம் நான் உரிமை கோருகிறேன் என்றால் சரியல்ல.

25. பழைய வீடுஇருந்த போது பிரச்சனை இல்லை என்றும் புதிய வீடு கட்டும் போது தான் பிரச்சனை என்றால் சரிதான்.

26. பழைய வீடு இருந்த இடத்திற்கு கூடுதலாக மேற்கு பக்கம் நான் வீடு கட்டுவதால் தான் பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரியல்ல.

27. வடக்கு பக்கம் உள்ள இடத்திற்கும் பிரதிவாதிகள் தென்வடல் முடுக்கு வழியாகத் தான் வந்தார்கள் என்றும் தற்போது நான் அந்த முடுக்கை அடைத்து பிரச்சனை செய்கிறேன் என்றால் சரியல்ல.

28. என் இடத்தை அளந்து பார்த்தால் நான் கூடுதலாக இடம் ஆக்கிரமித்து கட்டிய விவரம் தெரியும் என்றும் அதனால் தான் நான் அளக்கவிடவில்லை என்றால் சரியல்ல ஏற்கனவே 5 முறை அளக்கப்பட்டது.

29. நானும் என் சகோதரர்களுக்குள் ஏற்பட்ட பாக அட்டவணை பத்திரத்தில் எங்களுக்கு ஏற்றார்போல் அளவுகளையும், முடுக்குகளையும் குறிப்பிட்டதால் தான் பிரச்சனை என்றால் சரியல்ல.

30. பிரதிவாதிகள் கிரைய பத்திரத்தில் உள்ள அளவுகள் விவரம் தெரியுமா என்றால் தெரியும்.

31. பிரதிவாதிகள் கிரைய பத்திரத்தில் கிழக்கு பக்க எல்கையாக தென்வடல் முடுக்கு என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான் அது அவர்களாக போட்டுக்கொண்டார்கள்.

32. பிரதிவாதிகள் எங்களை எந்தவித இடைஞ்சலும் செய்யவில்லை என்றும் நான் தான் பிரதிவாதிகளுக்கு இடைஞ்சல் செய்கிறேன் என்றால் சரியல்ல. கூடுதல் விஸ்தீரணத்திற்கு நான் வீடு கட்டுவதால் தான் பிரச்சனை என்றும் எனவே நான் தாக்கல் செய்த வழக்கை தள்ளுபடி செய்தும் 1 முதல் 3 பிரதிவாதிகள் தாக்கல் செய்த வழக்கை அனுமதிக்கவேண்டும் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>**

இல்லை.

ஒம்/–J.ராஜேஷ்குமார்
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
தென்காசி